# மின்நிலா

ஜூன் 22, 2020






engalblog.blogspot.com

# எங்கள் ப்ளாக் பதிவுகளின் வாராந்திர தொகுப்பும், மற்றும் சில சுவையான பகுதிகளும், படங்களும் ....

## இந்த மின்நிலா புத்தகத்தைப் பற்றிய உங்கள் கருத்துகளையும், யோசனைகளையும் ...

engalblog@gmail.com

## என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

## நன்றி.

அட்டைப்படம் : ஊட்டி மலர்க்கண்காட்சி 2020

படம் அனுப்பியவர் : K G Visuweswaran.

============

பதிவுகளுக்கு இடையே உள்ள படங்கள்

அனுப்பியவர் : kayjee

**ஆசிரியர்கள் :**

**B SRIRAM**

**K G GOUTHAMAN**

**KAYJEE**

**K G Y RAMAN**

**K S**

## உள்ளே ...


| பொருள் | பக்கம் |
|---|---|
| புளியிட்ட கூட்டு/குழம்பு - ரெஸிப்பி - கீதா ரெங்கன் | 2 |
| | |
| தலைமுறை இடைவெளி -- சிறுகதை - ஜீவி | 6 |
| | |
| கேள்விகளும், பதில்களும் | 16 |
| | |
| நான் ஒரு மேடைப் பாடகன் ... ஸ்ரீராம் | 23 |
| | |
| பலசரக்கு ..... ஸ்ரீராம் | 28 |
| | |
| விளம்பரங்கள் | 33 & 34 |
| | |
| நம் வேர்களை அறிவோம்: இரு புத்தகங்கள் வாயிலாக. இரா. அரவிந்த் | 35 |
| | |
| சினிமாப்பாட்டு இந்த வார எங்கள் choice | 37 |
| | |
| முகக்கவசம் தயாரித்து இலவசமாக வழங்கும் திவ்யா ( + செய்திகள் ) | 45 |
| | |
| மூன்றாவது மூர்த்தி - எம்.எல்.வி:: ரமா ஸ்ரீனிவாசன் | 46 |
| | |
| சுய அறிமுகம் : ரேவதி நரசிம்ஹன் | 55 |
| | |
| எழுதுபொருள் --- kayjee | 56 |

# புளியிட்ட கூட்டு/குழம்பு - ரெஸிப்பி - கீதா ரெங்கன்

எபி கிச்சன் வாசகர்கள், பார்வையாளர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கம்.

கூட்டு/குழம்பு என்பது ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் செய்வதுண்டு. அல்லது செய்முறை ஒரே போல இருந்தாலும் வேறு வேறு பெயரில். இது என் பாட்டியின் செய்முறை. அவர் புளியிட்ட கூட்டுக்குழம்பு, புளியில்லா பொரிச்ச கூட்டு என்று செய்வதில் இன்று புளியிட்ட கூட்டுக்குழம்பு - அதாவது இதனை சாதத்தில் கலந்து சாப்பிடும்படி குழம்பாகவும் செய்யலாம். கெட்டியாகச் செய்தால் கூட்டு என்பார்.

இதற்குப் பெரும்பாலும் கீரைத்தண்டு, இளவன்/தடியங்காய்/வெள்ளைப் பூஷணி, கத்தரி, வாழைக்காய் சௌசௌ, இவற்றில் ஏதேனும் ஒரு காய் + கருப்புக் கொண்டைக்கடலை. கறுப்புக் கொண்டைக்கடலை இல்லை என்றால் வெள்ளை கொண்டைக்கடலை. அதுவும் இல்லை இருக்கவே இருக்கிறது கடலைப்பருப்பு. ரொம்ப சிம்பிள் ரெசிப்பிதான். இதில் பருப்பு எதுவும் வேக வைத்துச் சேர்ப்பதில்லை.

புகுந்த வீட்டில் பொரிச்ச கூட்டு என்று சொல்லுவது வேறு. சில வெரைட்டி வகைகள்தான் உண்டு. இருந்தாலும் செய்வது வெகு அபூர்வம். அந்த சில வகைகளையும் நான் தெரிந்து கொண்டு நம் வீட்டில் செய்வதுண்டு. அது போலவே இங்கு எபியில் வரும் குறிப்புகளையும்.

நமக்குத்தான் மொனொட்டனி என்பது ஆகாதே!!!!!! ரொட்டீனாகச் செய்வதிற்கிடையில் ஏதேனும் புதிதாய்க் கற்பது, செய்வது சமையல் என்றில்லை எல்லாவற்றிலும் என்று எல்லாவற்றிலும் கால் வைத்து நுனிப்புல்லேனும் மேய வேண்டும்!!!!! Jack of all trades, master of none!!!! இதில் அவ்வப்போது, என்னடா இது நாம் ஒன்றைக் கூட நன்றாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிட்டாமலேயே அரை செஞ்சுரியைக் கடந்தாயிற்றே என்றும் தோன்றும்தான்.

இந்தப் பதிவில் நான் கீரைத்தண்டு, வெள்ளைக் கொண்டைக்கடலை சேர்த்துக் கூட்டுக் குழம்பாகச் செய்திருக்கிறேன்.




*புளியிட்ட (பொரிச்ச) கூட்டுக்குழம்பு*

கீரைத்தண்டு 1 கப் ; வெள்ளைக் கொண்டைக்கடலை 1/3 கப்; வறுத்து அரைக்க: கடலைப்பருப்பு 1/2 டேபிள் ஸ்பூன் ; மிளகாய் வற்றல் 4 ; தேங்காய் 1/3 கப் (லூஸாக அளந்தால். அடைத்து அளந்தால் 1/4 கப்) ; புளி பெரிய நெல்லிக்காய் அளவு ; பெருங்காயம் ஒரு சிறு கட்டி.

வாணலில் 1 ஸ்பூன் எண்ணை விட்டு அதில் மிளகாயை வறுத்துக் கொள்ளவும். படத்தில் உள்ளது போல். அடுத்து பெருங்காயம் போட்டு பொரியும் போது கடலைப் பருப்பு போட்டு வறுத்ததும் அடுப்பை ஆஃப் செய்துடுங்க. ஆஃப் செய்துட்டு தேங்காய் போட்டு ஜஸ்ட் சில நொடிகள் புரட்டி எடுத்துடுங்க. வறுபடாம க்றிஸ்பா ஆகும். அது ஒரு டேஸ்ட் கொடுக்கும்.





கீரைத்தண்டைச் சிறியதாக கட் செய்து வாணலியில் சிறிது எண்ணை விட்டு கீரைத்தண்டைப் போட்டு கொஞ்சம் வதக்கிக்கோங்க. புளியைக் கரைத்து அதில் விட்டு 1/4 ஸ்பூன் மஞ்சள் பொடி போட்டு தேவையான உப்பும் போட்டுக் கொதிக்கவிடவும். ஊற வைத்த



கொண்டைக் கடலையை வேக வைத்து கீரைத்தண்டு வெந்ததும் அதில் சேர்த்து அடுப்பை சிம்மில் வைத்துக் கொஞ்சம் கொதிக்க விடுங்க. வறுத்து வைத்தவற்றை நன்றாக அரைத்து கூட்டுக் குழம்பில் சேர்க்கவும். எல்லாம் நன்றாகச் சேர்ந்து கொதித்து வந்ததும் அடுப்பை ஆஃப் செய்துவிடவும். வாணலியில் 1 ஸ்பூன் எண்ணை விட்டு அதில் கடுகு தாளித்துப் பொரியும் போது கருகப்பிலை சேர்த்துப் பொரிந்ததும் தாளித்துவிடவும். புளியிட்டக் கூட்டு/குழம்பு ரெடி.

இதைக் குழம்பாகவும் செய்யலாம். கெட்டியாகக் கூட்டாகவும் செய்யலாம். அப்பா வழிப் பாட்டி மற்றும் நம் வீட்டில் என்னென்ன காய்களில் செய்வார்கள் என்று இதன் வெளியே சொல்லியிருக்கிறேன். மற்றொரு பாட்டி இதில் உளுத்தம் பருப்பும் சேர்த்து இதே முறையில் செய்வாங்க. அப்படிச் செய்யும் போது கடலைப்பருப்பின் அளவும் குறைத்துக் கொள்வார். மற்றொருவர் கடலைப் பருப்பு சேர்க்காமல், உளுத்தம் பருப்பு வறுத்து மற்றதெல்லாம் இதே முறையில் செய்வார். எல்லா முறைகளுமே நன்றாக இருக்கும். ஒவ்வொரு சுவையுடன்.



**எபி ஆசிரியர்கள், நட்புகள், பார்வையாளர்கள் அனைவருக்கும் நன்றி. அடுத்த திங்க பதிவில் சந்திப்போம். இப்போது பை பை!**



Geetha Sambasivam

கூட்டுக்குழம்பு ரொம்பப் பிடித்த ஒன்று. அநேகமாகத் தென் மாவட்டங்களிலேயே பண்ணுகிறார்கள். என் புக்ககத்தினருக்கு இது பற்றித் தெரியாது. சொன்னால் சிரிப்பார்கள். ஆனால் நான் நாங்க நான்கு பேர் மட்டும் தனியாக இருக்கையில் பண்ணிக் கொள்வேன். இதுக்குக் கொத்தவரைக்காய்,அவரைக்காய், வாழைப்பூ போன்றவையும் நன்றாக இருக்கும். வாழைப்பூவில் அம்மா அடிக்கடி பண்ணுவார். கடலைப்பருப்பு மட்டும் வைக்காமல் கொஞ்சம் போல் கடலைப்பருப்போடு உளுத்தம்பருப்பு சேர்த்துக் கொள்வோம். அல்லது பொடி மட்டும் போட்டுத் தேங்காய் வறுத்துத் தாளிதத்தில் கொட்டியும் அம்மா பண்ணுவார். தேங்காயை அரைத்தும் விடுவது உண்டு. இதற்குத் தொட்டுக்கொள்ள இன்னொரு காய் பண்ணாமல் அப்பளம் பொரிப்பார் எங்க அம்மா. தேங்காய் எண்ணெய் வாசத்துடன் பெரிது பெரிதாக ஆனை அடி அப்பளங்கள். இப்போல்லாம் ஆனை அடி அப்பளம் என்றால் யாருக்குமே தெரியாது.



# தலைமுறை இடைவெளி

-- ஜீவி

எச்சரிக்கை: இந்தக் கதை 55 வருடங்களுக்கு முன் பிரபல பத்திரிகை ஒன்றில் பிரசுரமான கதை. மனித மன உணர்வுகள் என்னவாக இருந்தாலும் அதை அச்சு அசலாகப் பிரதிபலித்த எழுத்துக்கள் சிறந்திருந்த காலம் அது. அதனால்தான் அம்மா வந்தாள் போன்றவான எந்தப் பொய்மைப் போர்வையைப் போட்டும் போர்த்தி மறைக்கத் தேவையில்லாத கதைகள் வாசகர்களின் வாசிப்புக்கு உள்ளாகின. இப்பொழுதோ கதா பாத்திரங்களின் உணர்வுகளை அவர்தம் உரையாடல்கள் மூலம் வெளிப்படுத்தாத, ஏதோ விக்கிரமாதித்தன் கதையை குழந்தைகளுக்குச் சொன்ன அந்நாளைய பாட்டிமார்கள் போல எழுத்தாளர்களும் கதை சொல்லிகளாகி விட்டனர்.

இந்நாளைய பத்திரிகைப் பிரசுர கதைகளுக்கு எவ்வளவு மாறுபட்டு அந்நாளைய கதைகள் இருந்திருக்கின்றன என்பதற்கு ஒரு சாம்பிள் இந்தக் கதை. அம்மி,, பாவாடை - மேலாக்கு, தேங்காய்ச் சில், பாத்ரூம் செம்பு -- இவற்றின் ஊடே தான் இன்றைய வாழ்க்கைப் போக்கும் வளர்ந்து வந்திருக்கிறது என்பது என்னவோ உண்மை.

வாசித்து விட்டுச் சொல்லுங்கள்.

--- ஜீவி



அவர் ஆபிஸுக்குப் போய் விட்டார்.

ஒருவழியாக சமையலறைக் காரியங்கள் எல்லாம் முடிந்தன. நெற்றியில் ஆறாக வழிந்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டவள், தலைமுடியைக் கோதி விட்டுக் கொண்டே கூடத்துப் பக்கம் வந்தேன்.

கால்கள் கெஞ்சின. ஊஞ்சல் பலகை 'உட்கார வா' என்று அழைப்பது போல லேசாகக் கிறீச்சிட்டுக் கொண்டிருந்தது.

படபடவென்று வாசல் கதவை யாரோ தலைபோகிற அவசரத்தில் இடித்தார்கள்.

யாராக இருக்கும்?..

சத்தியமாக 'அவர்' இல்லை. ஆள் காட்டி விரலைக் குவித்துக் கொண்டு 'டொக் டொக்'கென்று தட்டுவது தான் அவர் வழக்கம்.

ராணியாகவும் இருக்காது. பள்ளிக்கூடம் விடும் நேரம் இன்னும் ஆகவில்லை.... பின்?..

தோட்டத்துப் பக்கம் மண்டை வீங்க காக்காய் ஒன்று கத்திக் கொண்டிருந்தது. யாராவது விருந்தினர்கள் வருகிறார்களோ?.. அம்மா கூட இந்தப் பக்கம் தலை காட்டி ரொம்ப நாளாச்சு. வரச்சொல்லி ஒரு வாரத்திற்கு முன்பு தான் போனில் சொல்லியிருந்தேன். முடிந்தால் பார்க்கலாம் என்று சொன்னாள். ஒருக்கால் அவள்தானோ?..

"அம்மா... அம்மா... கதவைத் திறவேன்?....."

எனக்கு ஒரே வியப்பு. கதைவை விரியத் திறப்பதற்குள் கதவுக்கும் எனக்கும் இருக்கும் இடுக்கில் நுழைந்து கொண்டு என் அருமை மகள் ராணி உள்ளே நுழைந்தாள்.

தாமரை முகத்தில் குறுகுறுவென்று கருவண்டுகள் மாதிரி கறுப்பு விழிகள். அலாதியான ஜ்வலிப்புடன் சுழித்தன. உதடுகளில் இளமைத் தனத்திற்கே உரிய படபடப்பு. என் அம்மா அடிக்கடி சொல்வாள், 'உன்னை அப்படியே உரிச்சு வைச்சிருக்காடி, என் பேத்தி'ன்னு. நானும் அந்த வயதில் இப்படித் தானா இருந்திருப்பேன் என்பதை நினைக்கும் போதே நெஞ்சு இனித்தது.

"ஏண்டி, ஏன் இவ்வளவு சீக்கிரம்?.. இப்போத்தானே பதினோறு மணி அடிச்சது?.."

நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வதற்கு ராணி கூடத்துப் பக்கம் இருந்தால் தானே?.. ஒரே ஓட்டம் தான். வேறு எங்கே?.. இவளுக்கென்று ஒரு கொல்லைப்புறம் வாய்த்திருக்கே!...

எல்லாம் அவர் செய்த வேலை. ஒரு மாசத்துக்கு முந்தி யாரோ கொடுத்தார்களென்று ரோஜாச் செடியொன்றை வாங்கி வந்து தோட்டத்தில் நட்டாலும் நட்டார், வந்தது வினை. கால் வருடத் தேர்வில் ராணியோட மார்க் இங்கிலீஷிலே திடீர்ன்னு குறைஞ்சதுக்குக் காரணம் என்னவென்றால் இந்த ரோஜாச் செடிதானென்று அடிச்சுச் சொல்வேன்.

பின்னே என்ன?.. ஒன்பதாவது வகுப்பு படிக்கிற பெண்ணொருத்திக்கு எந்த நேரமும் இந்த செடியைப் பற்றித் தான் நினைப்பு என்றால், எனக்கு ஆத்திரம் பொங்காதா, என்ன?.. இந்த லட்சணத்திலே கெட்ட கேட்டுக்கு அல்ஜிப்ரா மேத்ஸ் வேறே.

ஒரே வாரம் தான். என்னுடைய நேரடி பாதுக்காப்பிலே இந்த ராணியை மட்டும் அவர் விட்டுவிட்டாரென்றால் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றி விடுவேன். ஆனால் ஒன்று மட்டும் இப்பொழுதே சொல்கிறேன்., ராணியை மட்டும் என் வழிக்கு கொண்டு வ்ர வேண்டுமென்றால், முதல்லே என்ன செய்வேன் தெரியுமா?... விடுவிடுவென்று கொல்லைப்புறம் போய் வேரோட அந்த ரோஜாச் செடியைப் பிடுங்கி பக்கத்து வீட்டுக்கு தானம் பண்ணி விட்டுத் தான் மறுவேலை.

இப்பொழுதே அந்தக் காரியத்தைச் செஞ்சிடுவேன்.... ஆனால் இவளுக்கு அவள் அப்பா செல்லம் ஜாஸ்தி. அப்படி இப்படியென்று ஏதாவது ஒன்றென்றால் இந்த ராணி குய்யோ முறையோ கத்தி வீட்டையே ரெண்டாக்கிடுவாள்!.. அவர் ஆபிஸிலிருந்து வந்தவுடனேயே முகாரி ராகத்திலே பிலாக்கணம் பாட ஆரம்பித்தாள் என்றால் அவர் குதியோ குதியென்று குதிக்க, சும்மாக் கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தாற்போல... ராமா .. ராமா, வேண்டாம்ப்பா வேதனை!..

சப்தம் போடாமல் ரேழி பக்கம் சென்று அம்மிக்கல் பக்கம் நின்று எம்பிப் பார்த்தேன். ரோஜா செடி பக்கம் ராணியைக் காணோம். எங்கே போய் விட்டாள், இந்த காலகண்டி?..

பாத்ரூம் சுவரின் மேல் வைக்கப்பட்டிருந்த பித்தளைச் செம்பு தட்டுப்பட்டது. 'ஓகோ'வென்று தலையை ஆட்டிக் கொண்டே உள்ளே வந்தேன்.

ஊஞ்சல் கிறீச்சிட்டது.

அதன் அழைப்பை ஏற்காமல் இருக்க மனம் வரவில்லை. வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவியபடியே அமர்ந்தேன்.

ஒரு விதத்தில் ராணியை நினைக்கப் பெருமிதமாகத் தான் இருந்தது. எப்படி நெடு நெடுவென்று வளர்ந்து விட்டாள்! சரியாக என் தோளுக்கு வருகிறாள். அவள் அப்பாவைப் போலவே கொஞ்சம் வளர்த்தி தான்!.. போன வருஷம் நான் பார்த்த ராணி இல்லே, இப்போது. எனக்கே ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. நேற்று முகத்தைப் பிடித்து நெற்றியில் அவளுக்கு ஸ்டிக்கர் பதிக்கும் போது ரெண்டு பருக்கள் கூட கையில் உறுத்தினவே!..

தோட்டத்துப் பக்கம் சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தேன். கூடத்திற்குள்ளே 'விடுவிடு'வென்று நுழைந்த ராணி சுவர்ப்பக்கமாகவே ஒதுங்கி நடந்து மாடிப் படிகளை நோக்கி விரைந்தாள்.

"ஏண்டி, ஸ்கூல் விட்டுட்டாளா, இல்லை, திரும்பியும் போகணுமா?.."

"......................................"

"ஏண்டி, நான் கேக்கறது காதுலே விழலே?.."

"என்ன கேட்டேம்மா?.."

"என்ன பொண்ணுடி, பகல்லேயே தூங்கறயே! திரும்பியும் ஸ்கூலுக்குப் போகணும்மான்னு கேட்டேன்.."

"இல்லேம்மா.. ஒரே வயித்துவலியா இருந்தது. 'லீவ்' கேட்டுண்டு வந்துட்டேன். .."

"என்ன வயித்து வலியா? காலம்பற என்னடி இத்தனை நாளும் தின்னாததைத் தின்னுட்டே?.. வெறும் உப்புமா தானே?"

"ம்..ம்..." தலையைக் குனிந்து கொண்ட ராணி ஏனோ மாடிக்கு ஓடுவதிலேயே கவனமாக இருந்தாள். அவள் முகம் குங்குமம் போலச் சிவந்திருந்தது..

"ஸ்கூல் வாசல்லே விக்கற கண்டதை வாங்கிச் சாப்பிடாதேன்னா கேட்டாத்தானே? போதாக்குறைக்குப் பொன்னியும் வந்தாளான்னு இலந்தைப் பழ சீசன் வேறே. எல்லாம் புழுத்து நெளியறது; எவ்வளவு தின்னையோ?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா.." -- ராணி மாடிப்படிகளில் தடதடவென்று ஏறிப் போய் விட்டாள்..

இப்பொழுது தான் திடீரென்று சட்னிக்கு அரைக்க வேண்டுமென்ற ஞாபகம் வந்தது. அவருக்குத் தேங்காச் சட்னி என்றால் உயிர்.

சமையலறைக்குள் சென்று பொட்டுக்கடலைப் பொட்டலத்தையும், தேங்காய்ச் சில்லையும் எடுத்துக் கொண்டவள் கொல்லைப்புறம் வந்த பொழுது, பாத்ரூம் செம்பு அங்கேயே இருப்பது தெரிந்தது.

ராணி எடுத்து வர மறந்திருக்கிறாள்.

'சே! வயசு தான் தடி மாட்டுக்கு ஆகிற மாதிரி ஆகிறது. கொஞ்சம் கூட பொறுப்பு இல்லியே' என்று சலித்துக் கொண்டே தோட்டப்பக்கம் நுழைந்தேன்,. செம்பை எடுத்து வர. செம்புடன் திரும்பும் போது ..........

துணிகள் உலர்த்தும் கொடியில் உலர்த்தியிருந்த ராணியின் பாவாடை - மேலாக்கு.

'என்ன இது? என்றுமில்லாத திருநாளாய் தன் துணியைத் தானே கசக்கி உலர்த்தியிருக்கிறாள்?.. அந்த அளவுக்கு அக்கறை இவளுக்கு எங்கிருந்து வந்தது?' என்று நினைத்துக் கொண்டேன்.

பாவாடையைச் சரியாகப் பிழியாமல் உலர்த்தியிருந்ததினால் அதிலிருந்து ஈரம் சொட்டிக் கொண்டிருந்தது. அதை நன்றாகப் பிழிந்து உலர்த்தும் நோக்கத்தோடு கையில் எடுத்தேன்.

என் உடல் சிலிர்த்து, நெஞ்சு கிளுகிளுத்தது. வயிற்றிலிருந்து மார்பைக் குறி வைத்து இனம் தெரியாத இன்ப வேதனையின் மின்னல் கீற்றொன்று பாய்ந்தது.

என் கால்களுக்கருகில் ராணி உயிராகக் கருதி வளர்க்கும் ரோஜாச் செடியின் காம்பொன்றில் நேற்று நான் பார்த்த மொட்டொன்று இன்று இதழ் விரித்து மலராகச் சிரித்துக் கொண்டிருந்தது.

எனக்கு சின்ன வயசிலிருந்தே கூச்சம் ஜாஸ்தி. 'ஏண்டி, இப்படிச் சின்ன விஷயத்திற்கெல்லாம் நாணிக் கோணிக்கறேன்னு அந்த வயசிலே அம்மா என்னைத் திட்டித் தீர்க்காத நாளில்லை.

ராணி என்னோட வயிற்றிலே வளர்வதின் 'அறிகுறி' தெரிந்ததும் அதை இவரிடம் சொல்வதற்குள் நான் பட்டபாடு... அம்மாடியோ..! அது அந்த முருகப் பெருமானுக்குத் தான் வெளிச்சம்!

என்னோடு உடன் பிறந்த கூச்சம் தான் இப்போ மாடிக்கு ஓடிப் போய் ராணியிடம் எதைப்பற்றியும் கேட்க முடியாமலும், 'அதை'ப்பற்றி அறியாத அவளுக்கு அதன் இரகசியத்தை விளக்க முடியாமலும் தடுத்தது.

நேற்று வரை ராணி எனக்குக் குழந்தைதையாகத் தான் தென்பட்டள். ஆனால் இன்றோ?.. எனக்குச் சமமான ஒரு பெரிய மனுஷியைப் போல் எனக்குள்ளேயே ஓர் உணர்வு.... அவளிடம் போய் முகம் சிவக்க எப்படி அக்குவேறு ஆணிவேறாக ஒவ்வொன்றையும் பிட்டு வைப்பேன்? வெட்கமா இருக்கே! கூச்சமா இருக்கே!..

நான் செய்ய வேண்டியது ஒரு தாயின் கடமையாக எனக்குத் தோன்றினாலும் 'சட்'டென்று செயல்பட முடியாமல் எதுவோ என்னைத் தடுத்தது. இக்கட்டான இந்த விஷயத்திலிருந்து தப்பித்துக் கொண்டு விலகியோடவே மனசு விரும்பியது. இருந்தலும் என் மகள்?.. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல், வினோத உண்ர்ச்சிகளின் அவஸ்தையில்.. , தன் தாயிடமே சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தடுமாறி கொண்டிருக்கும் அவள் நிலைமை?.. 'இதற்குக் காரணம் என்ன, இது எதனால்?' என்று கூட அறிய முடியாத குழந்தைத் தனம் கொண்டவளாயிற்றே, அவள்?...

'நானும் இதையெல்லாம் கடந்து தானே வந்திருக்கேன்' என்று சட்டென்று ஒரு நினைப்பு.

அந்த வயசில் எனக்கே புரியாத ஒரு நிகழ்வு அது. குபுகுபுவென்று வெள்ளம் பாய்ந்தது போன்ற உணர்ச்சி. சின்ன வயசில் பென்சிலைச் சீவும் போது பிளேடு 'சர்க்'கென்று கையைப் பதம் பார்த்து விடுவது இல்லையா?.. அப்பொழுதெல்லாம் ஈரத் துணியை விரலைச் சுற்றிக் கட்டியது எனக்கு நினைவிலிருக்கிறது.

எனக்குப் பத்து வயசாயிருக்கும் போது தொடையில் சிரங்கு மாதிரி வந்து, கட்டியாக உருமாறி, திடீரென்று ஒரு நாள் உடைந்து விட்டது. வலியில் துடிதுடித்துப் போய் விட்டேன்.

டாக்டர் வீட்டிற்கு வந்திருந்தார்; புண்ணைக் கீறி 'பாண்டேஜ்' போட்டுக் கட்டி விட்டார். இப்போக் கூட அந்த வடு தொடையில் இருக்கிறது. பத்து வயசில் கட்டி உடைந்த பொழுது டாக்டர் சிகித்சை செய்தார். பதினைந்து வயசில் டாக்டரின் இடத்தில் அம்மா இருந்தாள். அவ்வளவு தான் எனக்கு அந்தக் காலத்தில் தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்களையெல்லாம் அழைத்து வந்து என்னை மணையில் உட்காரவைத்துக் கொண்டாடியது -- சாயந்தரம் சிமிலி உருண்டை செய்து எல்லோருக்கும் வழங்கியது -- இதெல்லாம் ஏனென்று எனக்கு அப்போது தெரியாது.

என்னுடைய அம்மாவுக்கு அப்பொழுது இருந்த கூச்சமின்மை எனக்கு இப்போது இல்லை. அதையெல்லாம் விட்டுத் தள்ளுங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் ஆபிஸிலிருந்து 'இவர்' வருவரே, எப்படி 'இந்த' நியூஸை அவரிடம் சொல்வேன்? என்னோடயே ஜனித்து, என்னோட இரத்தத்தின் ஒவ்வொரு அணுவிலேயும் இரண்டறக் கலந்து விட்டிருக்கும் பாழாய்ப் போன கூச்சத்தை எப்படி விரட்டிவிட்டு... ஓ, சத்தியமாக அது என்னால் முடியாத காரியம். இதற்குத் தான் சுதந்திரமாக வாழ்க்கையை நடத்தும் வாலிப உள்ளத்தினரிடையே, நல்லது - கெட்டது என்று நடந்தால் அதை நடத்திச் செல்லப் பெரியவர்கள் வீட்டிலிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் போலிருக்கு.

'இது' ஒரு பெண்ணினுடைய பெற்றோர்கள் பெருமைப்பட்டுக் கொண்டாடக் கூடிய ஒரு நிகழ்ச்சி தான் என்றாலும் தனி ஆளாய் என்னால் எதுவும் சாத்தியமில்லை., அவர் வந்ததும் என் கூச்சத்தை ஓரங்கட்டி எப்படியாவது அவரிடம் சொல்லி 'உள்ளூரிலிருக்கும் அவர் தமக்கையை வரவழைத்து ராணிக்கு எல்லா நல்லதுகளையும் செய்ய வேண்டும்; அம்மாவுக்கும் சொல்லி அனுப்ப வேண்டும்' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே, வாசல் கதவை 'டொக்'கென்று தட்டும் சபதம் கேட்டது.

அவர் தான்.

"ராஜலட்சுமிப் பாட்டி இன்னைக்கு ஏனோ சந்தோஷமாயிருக்காப் போல இருக்கே.." என்று நுழையும் போதே, என்னைப் பாட்டியாக்கிக் கிண்டல் செய்தபடி வந்தார் அவர்.

என்னுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்வதில் படு சூரர் இவர்.

'சந்தோஷத்திற்கு வேறு ஒன்றும் காரணமில்லை. ராஜலட்சுமி பாட்டிக்குப் பேத்தி பிறக்க வழி பிறந்தாச்சு' என்று சொல்ல நுனி நாக்கு வரை வார்த்தை வந்து விட்டது. உதடைக் கடித்து வார்த்தைகளை விழுங்கிக் கொண்டேன். எல்லாவற்றிற்கும் இந்தப் பாழும் கூச்சம் தான் காரணம்!

காலை அலம்பிக் கோண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தார் அவர். எதைச் சொல்வது, எப்படி ஆரம்பிப்பது என்று திகைத்தவளாய் ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு நான் நின்றிருந்தேன்.

"இன்றைக்கு என்ன விசேஷம்?.. அடேடே, முறத்திலே சேமியாப் பொட்டலத்தைப் பிரிச்சு வைச்சிருக்கையே-- இன்னிக்கு சேமியா பாயசமா?.." என்று நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டவர், என்னை விஷமத்தனத்துடன் பார்த்தார். அவர் புருவங்கள் இரண்டும் நெளிந்து பார்வையிலேயே என்னை விழுங்கின. "என்ன விசேஷம்ன்னு கேட்டேனே; ராணிக்குப் பிறந்த நாளா, கார்த்திகை மாசத்திலேன்னா அது வரும்?"

"இல்லே, வந்து ஒண்ணுமில்லே.."

"ஒண்ணுமில்லாத்துக்கா இத்தனை ஏற்பாடு? என்னான்ன.." என்றவர் என்னை இழுத்து ஊஞ்ச்சலில் தன் பக்கத்தில் இருத்திக் கொண்டார். முதுகுப் பக்கம் அவர் விரல் ஊர்ந்த சிலிர்ப்பில் சிலிர்த்துப் போனேன். மாடி ஏறிப் போன பெண் அப்பாவின் குரல் கேட்டு படியிறங்கி வந்து விடப் போகிறாளே என்ற பயம் வேறே.

"ம்.. ஏன் இவ்வளவு பீடிகை.. நானே சொல்லட்டுமா?.. இன்னைக்கு 'எக்ஸிபிஷன்' போகணும். நீ பாத்து வைச்சிருக்கிற கொட்டடிப் புடவையை வாங்கணும்.. அதானே?.."

நான் சிணுங்கினேன்.. "போங்கன்னா.. புடவை வேண்டியது தான்.. அதுக்காக பாயசம் வைப்பாளா?.."

அவர் புன்னகைத்தார். இந்தப் புன்னகை எங்கே கொண்டு போய் விடும் என்று எனக்குத் தெரியும்.. பின்னே என்ன?.. பெண் பிள்ளை ஒன்று வீட்டில் இருக்கிறது என்ற விவஸ்தையே பல நேரங்களில் அவருக்கு இல்லாது போய் விடும். பட்டு நூல் கத்தரிக்கிற மாதிரி ஆளைத் தள்ளி விட்டு விலகினால் தான் உண்டு. ஆனால் பல நேரங்களில் என்னாலும் அப்படிச் செய்ய முடியாமல் மாட்டிக் கொள்வது தான் வாடிக்கை.

சுவாசக் காற்று படும் அளவுக்கு நெருக்கம் காட்டினார். என் கூச்சம் என்னோட கூடப் பிறந்த ஒன்றல்ல என்று அப்பொழது நன்றாக உணர்ந்தேன். எல்லாத்துக்கும் இவர் தான் காரணம். எதற்கெடுத்தாலும் இப்படிக் கூச்சப்படுகிற மாதிரி என்னைப் பழக்கி விட்டார். இவருக்கு எதெல்லாம் பிடிக்கிறதோ அதையெல்லாம் இன்னொருத்தருக்கும் பிடிக்க வைக்கிறதிலே கில்லாடி இவர்.

இவர் வந்ததும் எதைச் சொல்ல நினைத்தேனோ அதையே சொல்ல முடியாமல் நா குழறியது.

"ம்.. வந்து... நம்ம ராணி வந்து.. " நான் வார்த்தையை முடிக்கக் கூட இல்லை. அதற்குள் மாடிப் படிகளில் 'தடதட'வென்ற சப்தம். சடாரென்று அவரிடமிருந்து விலகிக் கொண்டு மாடிப்பக்கம் திரும்பினேன்.

ராணி தான். கீழ்க் கடைசிப்படியில் ஒயிலாக நின்று கொண்டிருந்தாள். பெண் பார்த்து விட்டாளோ என்று ஒரு வினாடி மனம் துணுக்குற்றது.

இவரோ எதற்கும் சங்கடப்படாமல் ரொம்ப சகஜமாக, "என்ன குழந்தை? ஸ்கூலுக்குப் போகலையா? உன்னோட அம்மாக்காரி என்னவோ சொல்றாள்!.. என்னன்னு கேளு.." என்று சிரித்தார்.

ராணியின் உதடுகள் சுழித்துக் கொண்டன. "ஐயய்யே... நா இனிமே குழந்தை இல்லேப்பா.. பெரியவளாயிட்டேனாக்கும்!" என்று சர்வ சகஜமாகச் சொன்னவள், "ஏம்மா, கீழே கிடக்கே அந்தப் போர்வை.. அதை எடுத்திண்டு போகட்டுமா?.. இண்டர்வெல் விட்டப் பொழுதே பர்மிஷன் கேட்டுண்டு ஸ்கூலேந்து வந்திட்டேன்.

என் பிரண்டு நளினி துணைக்கு வந்தா.. அவளோட மெடிக்கல் ஷாப் போய் வேணுங்கறதெல்லாம் வாங்கிண்டு வந்திட்டேன். அவ தான் பணமெல்லாம் கொடுத்தா.. அப்புறம் திருப்பிக் கொடுத்துக்கலாம்.. தென்?.. ஆ! மறந்திட்டேனே! கொல்லைப்புறம் செம்பு வைச்சிருக்கேன்; தண்ணி தெளிச்சு எடுத்துக்கோ.." என்று சொல்லிவிட்டு கட்டில் மேல் கிடந்த என் போர்வையை எடுத்துக் கொண்டு அமைதியாக மாடிப்படிகளில் ஏறினாள்.

எனக்கு ஒரே திகைப்பு! நான் எவ்வளவு பீடிகையுடன் கூச்சத்தோடு ஆரம்பித்த விஷயத்தை என் மகள் எவ்வளவு சகஜமாக சாதாரணமாகச் சொல்லி விட்டாள்!

அந்தக் காலத்துப் பெண்களுக்குத் தான் இப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்று இதைப் பற்றியெல்லாம் சொல்லித்தர வேண்டியிருந்தது.

இந்தக் காலத்திலோ, இதற்கும் தாய் தேவையில்லை.. ஏகப்பட்ட புஸ்தககங்கள்; தானாய்ப் படிக்காவிட்டாலும் பாடப்புத்தகங்களுக்கிடையே வைத்துப் படித்து விட்டுத் தோழிகளுக்கு விளக்கிவிடும் தோழிகள்.. இப்படி எத்தனை சாதனங்கள், இல்லை?...

ஓ! தன்னுள் தானே வளர்ச்சிக்கான வித்தைக் கொண்டிருக்கும் வாழ்க்கைப் போக்கின் வரலாறு நினைத்து நினைத்துப் பார்க்க பிரமிப்பாய்த் தான் இருக்கிறது!




**?? உங்கள் கேள்விகளும்,**
**எங்கள் பதில்களும் ... !!**

அடுத்த பக்கத்தில் ...

**பானுமதி வெங்கடேஸ்வரன்:**

**1. பிராக்டிகல் ஜோக் செய்வதுண்டா? அல்லது அதற்கு விக்டிம் ஆனதுண்டா?**

# பிராக்டிகல் ஜோக் என்று (முட்டாள் தனமாக) நினைத்து சில அசட்டுக் காரியங்கள் டீன் வயதில் செய்ததுண்டு. இதற்கு மேல் விளக்கம் அசாத்தியம். அதிர்ஷ்ட வசமாக விக்டிம் ஆனதில்லை.

& செய்தது உண்டு. விக்டிம் ஆனதும் உண்டு. விக்டிம் ஆகி, அசடு வழிந்த சந்தர்ப்பங்களை ஞாபகம் வைத்திருந்து, அதன் பின் அத்தகைய சந்தர்ப்பங்களில் சமயோசிதமாக தப்பித்ததும் உண்டு.

**2. ஒரே சமையல் குறிப்பை இரண்டு பேர் எழுதி அனுப்பியிருந்தால் எங்கள் பிளாகில் இரண்டையுமே வெளியிடுவீர்களா? அல்லது முதலில் வரும் சமையல் குறிப்பைத்தான் வெளியிடுவீர்களா?**

# மாற்றம் சற்றேனும் இருப்பின் இரண்டையுமே.

& ஓர் உதாரணம் சொல்கிறேன்.

சங்கீத சீசனில் காலையில் மியூசிக் அகடெமி(+காபி), மதியம் மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ்(+சாப்பாடு) , மாலை ஏதேனும் ஒரு சபாவில் பிடித்த பாடகரின் (காசுக்) கச்சேரி என்று கேட்டிருக்கிறேன்.
சில நாட்களில், காலையில் என்னைத் துரத்த ஆரம்பித்த பூர்விகல்யாணி, மதியம் மற்றும் மாலைக் கச்சேரியில் கூடத் துரத்தும்.
இராகம் ஒன்றுதான்; ஆனால் பாடகர்களும், பக்கவாத்தியங்களும், பாடும் விதமும் வெவ்வேறு அல்லவா! நன்றாக இரசிப்பேன்.

அப்படித்தான் சமையல் குறிப்புகளும். ஒரே விஷயமாக இருந்தாலும், எழுதுபவரின் சமையல் குறிப்புகளில் சொல்லப்படும் அளவுகள், செய்முறை, எல்லாவற்றையும் விட அவற்றை அவர் சொல்லும் பாணி எல்லாவற்றையும் பொருத்து அது மாறுபடும். என்னால் எல்லாவற்றையுமே இரசிக்க முடியும். நம் வாசகர்களும் அப்படித்தான் என்று நினைக்கிறேன்.

ஆகவே, ஒரே புளியோதரையை நம்ம எ பி கிச்சன் கில்லாடிகள் அவரவர் செய்யும் முறைப்படி, அவரவர்கள் பாணியில் எழுதி அனுப்பலாம். ஒரே சமையல் பக்குவம், தொடர்ந்து வாராவாரம் வெளியிடப்படாமல், கொஞ்ச

வார இடைவெளி விட்டு வெளியாகும் விதத்தில், ஸ்ரீராம் அதை அமைத்துவிடுவார்.

3. வெள்ளி வீடியோவில் சினிமா பாடல்களை மட்டும்தான் பகிர்வீர்களா? லைட் கிளாசிகல் பாடல்களேயும் பகிரலாமே.

# மே....

& சினிமாப் பாடல்கள் வெகுஜனங்களுக்குத் தெரிந்த விஷயம். அதை வீடியோவுடன் சேர்த்து, அந்தப் பாடலைக் குறித்த சுவையான தகவல்களுடன் சேர்த்துப் போடுவதால், வாசகர்களுக்கு பாப் கார்ன் சாப்பிடுவது போல பார்த்து ரசிக்க முடியும். ஐந்து நிமிடப் பாடல். அதோடு ஓவர்!
ஆனால், லைட் கிளாசிகல், கர்நாடக சங்கீதம் இதெல்லாம் பெரும்பான்மையான வாசகர்களை அவ்வளவாக ஈர்ப்பது இல்லை. (வாசகர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் ஏதேனும் பாடி, அதை வீடியோ கிளிப் ஆக எங்களுக்கு அனுப்பினால், அதை வெளியிட நாங்கள் ரெடி )

4. விளையாட்டு வினையானது என்பார்களே, ஒரு விஷயம் எது வரை விளையாட்டாக இருக்கும்? எப்போது வினையாக மாறும்?

# அடுத்தவர் ரசிக்கும் அல்லது பொறுத்துப் போகும் வரை விளையாட்டு. எரிச்சல் அதிருப்தி சினம் ஏற்படத் தொடங்கினால் வினை..

5. சுஜாதா இறந்ததும் அவரைப்போல அவர் பெயரில் நிறைய பேர்கள் எழுதுகிறார்கள் ஏன் லா.ச.ரா. போலவோ, அசோகமித்ரன் போலவோ, ஜெயகாந்தன் போலவோ யாரும் எழுதவில்லை?

# லா ச ரா பாணி தவிர மற்றவை போல எழுதுவார்கள். நம் பார்வையில் படுவதில்லை.

6. நாம் இப்போது ரொம்பவும் தொட்டாசுணுங்கி ஆகி விட்டோமோ? வாசந்தியின் ஆகாச வீடுகள் என்னும் கதையை அவர் 1976 அல்லது 1977ல் எழுதியிருக்க வேண்டும். அதில் ஒரு கிராமத்தின் அக்கிரகாரத்தை தோலுரித்திருப்பார். இப்போது அப்படி எழுதினால் பொங்கி விட மாட்டார்களா?

# அக்ரகாரத்தின் எந்த அம்சங்கள் "தோலுரிக்கப்" பட்டன என்று சொல்லுங்கள். பதில் தர முயற்சிப்போம்.

**நெல்லைத்தமிழன்:**

**ஆண்கள் பெரியவர்களை வணங்கும்போது அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் வணங்கும்போது பஞ்சாங்க நமஸ்காரம் செய்யணும் என ஏன் விதித்திருக்காங்க?**

**# Forwarded to Brahmasri Sengalipuram Anantharama Dikshithar.**

**& நமஸ்காரம் செய்யும் முறையை, இங்கே சென்று தெரிந்துகொள்ளுங்கள்.**

**மேலும், 'வெப்துனியா' தளத்தில் காணப்படும் விவரம் :**

**" பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் மட்டுமே புரிய வேண்டும். அவர்கள் எப்பொழுதும் சாஷ்டாங்க நமஸ்காரம் புரியக்கூடாது. இந்து மத சாஸ்திரங்களின் படி, பெண்களின் கர்ப்பப்பை மற்றும் மார்பகங்கள் தரையில் படக் கூடாது. எனவே அவர்களுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் புரிய அனுமதியில்லை.**

**பெண்களின் கருப்பையானது ஒரு உயிரைத் தாங்கும் உன்னத வேலையைச் செய்கின்றது. அவர்களின் மார்பகமானது குழந்தைக்கு பாலூட்டும் உயரிய வேலையைச் செய்கின்றது. எனவே, அவை இரண்டும் தரையில் படக்கூடாது."**



**('சாஷ்டாங்கம், அஷ்டாங்கம், பஞ்சாங்கம் எல்லாம் எனக்கு எதுக்கு? எனக்கு இது போதும்' என்கிறாரோ இவர்! )**

திருக்குறள் போன்ற நூல்களை தங்கள் இஷ்டத்துக்கு வலிந்து பொருள் கொள்வது சரியா?

$ 'ஊக்க மது கைவிடேல்' என்பது போல்தான். இதைப் படித்தவுடன் டாஸ்மாக் க்யூவில் போய் நின்றுவிடுவீர்களா என்ன!

# இலக்கியங்கள் அந்த சுதந்திரத்தை வாசிப்பவர்களுக்குத் தருவனவே.

ரமா ஸ்ரீநிவாசன் :

1. நீங்கள் யாரையாவது மிகவும் நெருக்கமாகவும் மிகவும் புரிந்தவராகவும் நினைத்துப் பழகும்போது அவர் நிஜத்தில் மற்றவர்களிடம் உங்களை முதுகில் குத்துகிறார் என்று உணரும்போது உங்களது எதிர் செயல் எவ்வாறு இருக்கும்.

# அவர் முதுகில் குத்துகிறார் என்னும் தகவல் எனக்கு யார் மூலம் கிடைத்ததோ அவரைப்பற்றிய என் நம்பிக்கை கேள்விக்குரியது ஆகிவிடும்.

& நான் என்னுடைய திருமதியை, மிகவும் நெருக்கமானவராகவும், மிகவும் புரிந்தவராகவுமாகத்தான் திருமணம் நடந்த தினத்திலிருந்து பழகி வருகிறேன். அவர், அவ்வப்போது என்னை முதுகில் குத்துவதுண்டு. திகைக்காதீர்கள். நான்தான் அவரிடம் எனக்கு வாயுப்பிடிப்பு வரும்போதெல்லாம் முதுகில் குத்தச்சொல்லி, ஏப்பங்கள் பல விடுவேன்!

2. சிறு வயதிலிருந்த வீடு, விளையாடிய விளையாட்டுத் திடல், நடந்து சென்ற தார் சாலை யாவுமே அவ்வயதில் மிகவும் பெரியதாகவும் மிகவும் நீளமாகவும் தெரியும். அதே இடத்தை இப்போது வயது முதிர்ந்த பின் போய் பார்த்தால், எல்லாம் நம் கண்ணுக்கு சாதாரண அளவாகவும், சாதாரண தூரமாகவும் காணப் படும். இது ஏன்?

# இது இயல்பான ஒன்று தான். சின்னவயதில் கமர்கட்டு கடலை மிட்டாய் போன்றவை நம்மைக் கவர்ந்த மாதிரி பிற்காலத்தில் இருப்பதில்லை. Bird's eye view மாதிரி ant's eye view.

$ ஆம், உண்மையே. சிறு வயதில், நாகையில் வீட்டிலிருந்து கிளம்பி பள்ளிக்கூடம் வரை நடந்து செல்வது மிகவும் அதிக தூரமாகத் தோன்றியது. அதே போல் வீட்டிலிருந்து பாண்டியன் டாக்கீஸ் போவதும். பல வருடங்கள் கழித்து அங்கே சென்றபோது, 'அட! இந்த இடங்கள் எல்லாமே இவ்வளவு பக்கத்திலா இருந்தன!' என்று ஆச்சரியப்பட்டேன்.

3. எனக்கு ஒருவரைப் பிடிக்காமல் போய் விட்டால், அது வருடக்கணக்கானாலும் அவரை அண்ட மாட்டேன், அண்ட விடவும் மாட்டேன். என் வாழ்க்கையில் இது போல் ஓரிருவர் இருக்கின்றார்கள். என்ன என்றே சொல்ல முடியாத ஒரு சங்கடமான உணர்ச்சி மனதிற்குள் ஓடும். இது ஏன்?

# முதலில் ஒருவரைப் " பிடிக்காமல் போவது " ஏன் என்பதைத்தான் ஆராயவேண்டும். உரிய காரணங்கள் இருக்குமானால் அவரிடமிருந்து ஒட்டாமல் தள்ளி இருப்பது அறிவுடைமைதான்.
சங்கடங்களைத் துடைத்தெறிவதுதான் சரியான செயல்பாடு. மாறாக அதை மறக்காமல் மீண்டும் மீண்டும் அசைபோடுவதன் காரணமாக அவை தீனி போட்டு வளர்க்கப் படுகின்றன. இதைப் புரிந்து கொண்டால் பல வகையான வலிகள் மறைந்துவிடும்.
நடந்த நிகழ்ச்சி என்ற பதிவு மட்டும் இருந்து அது நம் உணர்ச்சிகளை மீண்டும் மீண்டும் உயிர்ப்பிக்காதிருந்தால் இந்த வகை மனச் சங்கடங்கள் முளைக்காதிருக்கும்.

4. பிள்ளைகள் வளர வளர அவர்களுக்கு நல்லது கெட்டவைகளை பிரித்து பாகுபாடு காட்டி வளர்ப்பது ஒரு பெற்றோரின் அடிப்படை கடமையாகும். ஆயின், சில விஷயங்களை கற்றுக் கொடுப்பதே பெற்றோர்களுக்கு ஓர் போராட்டமாக இருக்கும். ஆண் பெண் விஷயங்கள், மற்ற நடவடிக்கை சரியில்லாத ஆண்கள் / பெண்கள் பற்றி நம் பிள்ளைகளை உஷார் செய்வது ஆகியவை சமயத்தில் பகீரதப் பிரயத்தினமாக இருக்கும். இதற்கு ஏதாவது சுலபமான வழி இருக்கின்றதா?

# சுலபமான வழி இல்லை என்பது உண்மை. சில விஷயங்கள் பெற்றோர் சொல்லி பிள்ளைகள் உணர வேண்டிய கட்டாயம் இல்லை என்பது என் எண்ணம். விலங்குகள் இனப்பெருக்கம், பெற்றோர் வழிகாட்டி நிகழ்வதில்லை. ஆனால் அபாயங்கள், அபாயம் விளைவிக்கும் கவர்ச்சிகள், ஈர்ப்பினால் எழும் பிரச்சினைகள் அசம்பாவிதங்கள் ஆகியவை குறித்து கட்டாயம் பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லியாக வேண்டும் என்னும் நிலைமை அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது.

& குழந்தைகளை நண்பர்களோடு பழகவிட்டாலே போதும். நண்ப, நண்பிகளிடமிருந்து பல விஷயங்களைக் கற்றுக்கொள்வார்கள். நேற்று வெளியான 'தலைமுறை இடைவெளி' கதை படித்தீர்கள் அல்லவா !

5. நம் வீட்டுப் பெரியவர்கள் என்றாலும் அவர்கள் நமக்கோ நம் பிள்ளைகளுக்கோ பிடிக்காத விஷயத்தை செய்யும்போது, மனம் புண்

**படாமல் அவர்கள் செய்வது தவறு என்பதை எவ்வாறு சுட்டிக் காட்டி புரிய வைப்பது?**

# தவறு செய்யும் போது சற்றுக் கடுமை காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. புண்படுத்துவதல்ல நோக்கம் எச்சரிக்கை செய்வது என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

& பெரியவர்கள் நமக்கோ / நம் பிள்ளைகளுக்கோ பிடிக்காத விஷயத்தை செய்யும்போது, அந்த சூழ்நிலையை மிகவும் ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும்.

1) குழந்தைகள் இருக்கும் இடத்திலேயே அல்லது அவர்கள் எதிரிலேயே பெரியவர்களிடம் நம் அதிருப்தியை வெளிக்காட்டக்கூடாது.

2) குழந்தைகள் வெளியே சென்றிருக்கும் நேரத்தில், பெரியவர்கள் மனம் புண்படாத வகையில், அவர்களிடம், நடந்தது என்ன, அது ஏன் நமக்குப் பிடிக்கவில்லை அல்லது ஏற்புடையது இல்லை என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும்.


**துரை செல்வராஜூ:**

**பக்தி என்பது எது?**
**ஆன்மீகம் என்பது என்ன?**


# பக்தி என்பது இறைவன் பார்த்துக் கொள்வான் என்று முழுதும் நம்பி கவலை சற்றும் இல்லாமல் நிச்சிந்தையாக (சிந்தா என்றால் வடமொழியில் கவலை) இருப்பது.

ஆன்மீகம் என்பது புறப்பொருள் துய்ப்பு என்பதன் நிலையாமையை உணர்ந்து மனச்சோர்வு அல்லது கலக்கம் முற்றிலும் இல்லாமல் இருப்பது.

இது என் பார்வை. அதாரிட்டி எல்லாம் கேட்டால் கிடைக்காது.



Art by
????


kayjee

# நான் ஒரு மேடைப் பாடகன்...

இந்த வகையில் எனக்கும் ஒரு ஆசை இருந்தது.



**இப்படி சென்ற வாரம் முடித்திருந்தேன். அனைவருக்கும் அவரவர் ஆசை நினைவுக்கு வந்திருக்கும். எனக்கு என்ன ஆசை என்று சொல்கிறேன்.**

**கையில் கிடாரை வைத்துக்கொண்டு பாடும் ஆசை! அல்லது கிடார் வாசிக்கும் ஆசை.**



கிடாரைக் கையில் வைத்து அதன் கம்பிகளைத் தட்டினாலே சங்கீதம் வந்து விடுமா என்ன! என்னிடம்தான் ஞானம் கம்மியாச்சே... முயற்சியும் கம்மி! எனவே 'ப்ராக்ராஸ்ஸிவ் காம்ப்ரமைஸ்' (நன்றி சுஜாதா) ஆக பின்னர் கையில் கிடார் வைத்துக்கொண்டு ஒரு போட்டோவாவது எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிற அளவுக்குத் தேய்ந்தது என் ஆசை.



சரி, வரிசையாக வருகிறேன்...

மதுரையில் நான் டியூஷன் சென்ற இடத்தில் எனக்கு இரு நண்பர்கள் அறிமுகமானார்கள்.

பிரபு, பாலா.

இருவரும் செம தோஸ்த். இணை பிரியாத நண்பர்கள். பாலா சற்றே வசதிக்குறைந்த பையன். ஆனால் பெரிய மனிதன் மாதிரி தோரணை, வாட்ட சாட்டமான (அடிதடிக்கு உதவும்) தோற்றம். அந்த வயதுக்கு சற்றே அடர்ந்த மீசை. பிரபு சற்றே வசதியான வீட்டுப் பையன். ஒல்லியான உருவம். சற்றே கருத்த உருவமாயினும் கவர்ந்திழுக்கும் சிரிப்புக்குச் சொந்தக்காரன். அரும்பு மீசை.

இருவருமே சேர்ந்தேதான் சைக்கிளில் சுற்றுவார்கள். தனித்தனி சைக்கிள்! நானும் சைக்கிள் வைத்திருந்தேன்.

டியூஷன் முடிந்ததும் ஒருநாள் என்னையும் அவர்களுடன் டீ சாப்பிடக் கூப்பிட்டார்கள். டீக்கடையில் பேசியபடியே டீயைக் குடித்துக்கொண்டிருந்தோம். தினமும் எதிர்ப்படும் நேரத்தில் மட்டும் புன்னகை புரிந்த நிலையிலிருந்து நாங்கள் சற்றே நெருக்கமான நேரம் அது.

"எப்படி தோஸ்த் இப்படி காலங்கார்த்தால நேரத்துக்கு வந்துடறீங்க... ஸார் உங்களை வச்சே எங்களை லந்தேத்தறாரு..." என்றான் பிரபு. எப்போதுமே இந்த இருவரும் டியூஷன் ஆரம்பித்து பத்து, பதினைந்து நிமிடங்கள் கழித்துதான் உள்ளே வருவார்கள்!

தஞ்சாவூரில் இருந்த காலம் வரை நாங்கள் ஃபிரெண்ட்.. என்று அழைத்தோ (அதுவும் எப்போதாவது), பெரும்பாலும் அவரவர் பெயரைச் சொல்லியோ அழைத்துப் பேசிக்கொள்வோம். மதுரையில் எல்லோரும் நண்பர்களை தோஸ்த் என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். அவன் பயந்துட்டான் என்று சொல்ல வேண்டும் என்றால் "அவன் அப்படியே டர் ஆயிட்டான்" என்றார்கள். அதுமாதிரி ஒரு வார்த்தைதான் இந்த 'லந்து' என்னும் வார்த்தையும்! நக்கல், கிண்டல் என்கிற அர்த்தத்துக்கு வரும்! தஞ்சையிலிருந்து நான் மதுரை வந்த புதிதில் இந்த வார்த்தை மாறுதல்களால் சில கிண்டல்கள் எங்களுக்குள் நிகழும்! சரி... பிரபுவின் கேள்விக்கு வருகிறேன்.

"என்னால் முடிந்த ஒரே நல்ல விஷயம் அதுதான்" என்றேன்.

அடுத்து வந்த நாட்களில் தினசரி டீ குடிப்பது வழக்கமானது. அதில் எனக்கு ஒரு சங்கடம்.

அவர்கள் அளவு என் கையில் காசு இருக்காது. எப்போதாவதுதான் நான் கொடுப்பேன். கமிஷன் அடிக்கும் கஷ்டம் எனக்கல்லவா தெரியும்! அதுவே சினிமாவுக்குப் போவதற்கு போதாது! சைக்கிள் செலவுகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும்! எனவே தினசரி அவன் காசில் டீ குடிக்க நான் முரண்டு பிடித்தபோது பிரபு "சரி... இனி தினமும் நீயே கொடு" என்று விட்டான் சட்டென்று!

திகைத்துப்போன என்னைப் பார்த்துச் சிரித்த பாலா "அவனிடம் காசு இருக்கு... கொடுக்கறான். நீ ஏன் சங்கடப்படறே...? விடு" என்றான். பிரபுவும் புன்னகைத்தான். பாலா அதிகம்

பேசவே மாட்டான். ஆனால் இருவரும் சேர்ந்தே இருப்பார்கள். சைக்கிளில் அமர்ந்தவாக்கில் காலை ஊன்றி, பாரின்மீது கைகளை வைத்து குனிந்திருப்பது பாலாவின் வழக்கம்.

இவர்கள் ஏன் என்னுடன் நெருக்கம் காட்டிப் பழகினார்கள் என்பது அப்போது எனக்குப் புரியாத புதிர். டியூஷன் இல்லாத ஒருநாள் என் வீட்டு வாசலுக்கே வந்து அழைத்தார்கள். எனக்கு சங்கடம், சந்தேகம். இவர்களின் இங்கைய வருகையை சந்தேகப் பட்டதற்கு என்னிடம் காரணங்கள் உண்டு. என் சகோதரியிடம் வம்பிழுத்த சில நபர்களை நான் டீல் செய்திருக்கிறேன். இவர்களும் அப்படியா என்கிற சந்தேகம்!

ஆனால் அவ்வப்போது என்னை மறைமுகமாக மிரட்டி வந்த சிலர் பாலாவைக் கண்டு ஒதுங்கி எச்சரிக்கையானது தெரிந்தது! காரணம் அவன் தோற்றம்! வழக்கமாக வம்பிழுக்கும் ஒருவன் இன்னொரு நண்பனுடன் எங்கள் வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு சைக்கிளில் செல்லும்போது பாலாவும், பிரபுவும் அங்கிருக்க, பாலா அவர்களையே தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவன் என்னைப் பார்த்தான். என் முகபாவம் கண்டதும் புன்னகைத்தவன், "தொல்லை கொடுக்கறாங்களா? தங்கச்சியா?" என்றவன், சைக்கிளை நேராக்கி அவர்களைத் தொடர்வது போல ஒரு மூவ் கொடுத்தான். திரும்பிப் பார்க்காமல் வேகமாக சென்ற அவர்களை அப்பறம் நான் பார்க்கவில்லை!

ஆனால் அந்த முரட்டு பாலாவிடம் கூட நான் சந்தேகப்பட்ட மாதிரி ஒரு சிக்னலே இல்லை என்பது தெரிந்தது, உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் கேள்விக்குறியுடனே தொடர்ந்து பழகி வந்தேன். இவர்களுடைய வருகையால் என் ரெகுலர் நண்பர்கள் சிலரிடமிருந்து எனக்கு சற்று இடைவெளி ஏற்பட்டது.

ஒருநாள் டியூஷன் முடிந்ததும் "அக்கா உடனே வீட்டுக்கு வரச்சொன்னாங்க" என்று கூறி பிரபு டீக்கடைக்குச் செல்லாமல் வீடு நோக்கி கிளம்பிவிட்டான். வழியில் நான் என் பாதையில் சைக்கிளைத் திருப்பும் சமயம் என்னையும் வற்புறுத்தி அழைத்துக்கொண்டு அவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டான். அரசுக்குடியிருப்பில் வசித்த எனக்கு தனி காம்பவுண்டில் வசித்த அவர்கள் வீடு பார்க்கும்போதே பிடித்துப் போனது. சைக்கிளை போர்டிகோவில் வைக்கச்சொல்லிவிட்டு என்னையும் உள்ளே அழைத்துச் சென்று விட்டான்.

பாலா அந்த வீட்டின் சகஜமான வருகையாளன் என்பது தெரிந்தது. அவன் சகஜமாக உள்ளே சென்று சோபாவில் அமர்ந்து அங்கிருந்த பத்திரிகையை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தான்.

கூச்சத்துடனும் சங்கோஜத்துடனும் (நான் எப்பவுமே அப்படிதானுங்க) உள்ளே வந்து, சோபா நுனியில் அமர்ந்திருந்த என்னை இழுத்து உள்ளே தள்ளி முரட்டுத்தனமாக சரியாக அமரவைத்துச் சிரித்தான் பாலா.

"தம்பி.. வந்துட்டியா.." என்று உள்ளேயிருந்து வந்த அவன் அக்காவிடம் என்னை அறிமுகப்படுத்தினான் பிரபு. இரண்டு கோப்பை டீயுடன் வந்த அவன் அக்கா "இது யாரு பிரபு? புதுத்தம்பியா இருக்கு... சொல்லக்கூடாது?" என்று சொல்லி, "இந்தா தம்பி... இதை நீ எடுத்துக்க... பாலா.. இது உனக்கு.. பிரபு இருடா... உனக்கு இதோ கொண்டு வர்றேன்" என்று உள்ளே சென்றார். அவர் மருத்துவ இறுதி ஆண்டு மாணவி என்று பின்னர் தெரிந்தது.

இதை இவ்வளவு விளக்கமாக கதை போல ஏன் சொல்கிறேன் என்றால், நான் ஒரே ஒரு நண்பனைத்தவிர, வேறு யாரையும் உள்ளே அழைத்து உட்கார வைத்துப் பேசியதில்லை. அந்த உள்ளே வந்த நண்பனையும் நான் அழைத்ததில்லை. அவனே உள்ளே வந்து அமர்ந்து விடுவான். அவனுக்குத்தான் நான் டைப் அடித்துக் கொடுப்பது!

இந்நிலையில் இந்தக் கலாச்சாரம் எனக்கு புதிதாக இருந்தது. ஏதோ கற்றுக் கொடுத்தது!

ரொம்ப போர் அடிக்கிறேனா என்று தெரியவில்லை. ஜி எம் பி ஸார் "இப்போதான் கொஞ்சம் வெளியில் வந்து பேச ஆரம்பித்திருக்கிறீர்கள்" என்று சொன்னது(ம்) நினைவுக்கு வருகிறது! ரொம்ப போர் அடித்தால் இதை ஸ்கிப் செய்து மற்ற பகுதிகளுக்குச் சென்று விடவும்!

அவன் அக்கா கிளம்பிச் சென்றதும் பிரபு உள்ளே சென்று கையில் எடுத்து வந்த பொருளைக் கண்டதும் எனக்கு மூச்சே நின்றது!

அது ....

ஒரு .....



## கிடார்!

---

# பொக்கிஷம் :

**இப்போ கொரோனா… அப்போ டெங்கு! இலை இல்லை டிங்கு!**




**சாமா ஜோக்ஸ்… படிக்க முடிகிறதா?**


கிரிக்கெட் தமாஷ்
சாமா
அம்பயர்!
H.B.W
அதான் கேட்டேன்! அங்கிருந்து 'விக்கெட்' இருக்கான்னு தெரியல்லே! ... இருக்கு ... இனிமே நான் 'போஸ்' பண்றேன்!
மாட்சுக்கு டிக்கட் வாங்கிய வாண்டுப் பயலின் பயங்கரக் கனவு.....!
"என் டாக்டர் இந்த டிங்கு ஜுரம் ஊரில் இருக்கா? இன்னும் ஒரு வாரம் நீடிக்குமா?"
"ஓஹோ! கிரிக்கட் மாட்சை

# பழைய செய்தி ஒன்று.. கொஞ்சம் சுவாரஸ்யமான செய்தி!

**வாஷிங்டன்: பிரசவத்தின் போது கைகளை கோர்த்தபடி தாயின் கர்ப்ப பையில் இருந்த இரட்டைகுழந்தைகளை டாக்டர்கள் ஆச்சிரியமாக பார்த்தனர். அமெரிக்காவை சேர்ந்த தம்பதிகள் பில் போத் மற்றும் சாரா டிஸ்டில்தவெயிட் ஆவர். சாரா கர்ப்பமாக இருந்தார். கடந்த அன்னையர் தினத்தையொட்டி அவர் குழந்தை பெற்று கொள்ள விரும்பினார். இதை தொடர்ந்து நேற்று டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுத்தனர்.**

**அவருக்கு இரட்டை பெண் குழந்தை பிறந்தது. அதிசயம் என்னவென்றால் இரண்டு குழந்தைகளும் தங்களது கைகளை கோர்த்தபடி பிறந்து உள்ளது. குழந்தைகளுக்கு ஜில்லியன் மற்றும் ஜின்னா என பெயரிட்டு உள்ளனர். இது குறித்து சாரா கூறும் போது இது அன்னையர் தினத்தில் எனக்கு கிடைத்த நல்ல பரிசுப் பொருள். நான் இதை நம்ப வில்லை, இது அதிசயமானது இருவரும் கைகோர்த்தபடி பிறந்து உள்ளனர். இருவரும் நல்ல நணபர்களாக இருப்பார்கள் என கூறினார்.**

**- தினகரன் -**



## ஒரு சின்னப்பறவை...!

சென்ற வாரம் அலுவலகத்தில் மின் விசிறியில் அடிபட்டு விழுந்த பறவை... ஏதோ தங்க மீன்கொத்தி என்று சொன்னார் பூபாலன். அது ஏன் இங்கு வந்தது என்று தெரியவில்லை! பின்னர் ஆட்டோவில் வைத்து வனத்துறையிடம் ஒப்படைக்க எடுத்துச் சென்றார். இது கொஞ்ச நாட்களுக்கு முன்னால் எங்கள் (பழைய) வீட்டுக்கு வந்த அந்தப் பறவை அல்ல!




# விளம்பரம் !!

## உங்கள் அபிமான எங்கள் ப்ளாக்கில் எதிர்பாருங்கள் !!



## எங்கள் ப்ளாக் வாசகர் L KARTHIK (எல் கே) அவர்கள் அனுப்பிய விளம்பரம் :




இந்த வாரம் கதம்பப் பகுதி குறைவு என்பதால் புத்தக அறிமுகம் இன்றே வெளியிட்டு விடலாம் என்று நினைக்கிறேன். இந்தச் சுருக்கமான அறிமுகத்தில் இரண்டு புத்தகங்களை அறிமுகப்படுத்துகிறார் அரவிந்த்.

# நம் வேர்களை அறிவோம்: இரு புத்தகங்கள் வாயிலாக.

-: இரா. அரவிந்த் :-

அனைத்து மக்களையும் ஒரே நாகரீகக்குடையின்கீழ்க் கொண்டுவர முயலும் வியாபாரமே கடவுளாக விளங்கும் இன்றைய உலகமயமாக்கல் சூழலில் நம்மை நாமே அறிந்துகொண்டால் மட்டுமே நம் பெருமையையும் நாம் இழந்துகொண்டிருக்கும் நம் சொந்த வளங்களையும் உணர்ந்து அவற்றை தற்காத்துக்கொள்ள முடியும்.

தமிழன் யார்? தமிழனுக்கு மதம் என்பது ஆரம்பகாலத்திலிருந்தே இருந்ததா? தமிழனின் சங்ககாலம் தொட்டு 20 ஆம் நூற்றாண்டு வரையிலான வரலாறு என்ன? அவனது வாழ்வு, பண்பாட்டுக்கூறுகளும் எந்தெந்த காலங்களில் எவரெவர் வருகையால் எப்படியெல்லாம் மாற்றமடைந்துள்ளன?

எவையெவை உண்மையிலேயே தமிழனின் பண்டிகைகள், எவையெவை இடையில் எப்படி புகுத்தப்பட்டுள்ளவை? ஒருகாலத்தில் உயர்ந்த இடத்தில் மதிக்கப்பட்ட பறையர், பள்ளர் போன்றோர் இன்று தாழ்ந்த சாதியினராக மாறியது எங்ஙனம் ? போன்ற பல சந்தேகங்களுக்கு விடையே திரு கே. கே. பிள்ளை அவர்களின் தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், அகழாய்வுகள், வெளிநாட்டார் குறிப்புகள், நாணயங்கள் போன்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ‘தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்’ நுல்.

சிறுவயதிலிருந்தே நம் மனத்தை அரித்துக்கொண்டிருக்கும் அடிப்படைக் கேள்விகளான கடவுள் யார்? அவர் உண்மையா அல்லது மானிடரின் கற்பனை ஊன்றுகோல் மட்டும்தானா? அவரைக் குறித்த ஆன்மீகம் மற்றும் அறிவியல் சார்ந்த விவாதங்களில் எவையெவை தர்க்கரீதியாக ஏற்றுக்கொள்ளத் தக்கவை?

உயிர் அல்லது ஆன்மா உள்ளதா? அது இதயத்தில் உள்ளதா அல்லது மூளையில் உள்ளதா? முன்பே எழுதப்பட்ட விதி என்ற

ஒன்று இருப்பின் நம் உடல் மற்றும் ஆன்ம பலம் கொண்டு நம்மை மாற்றுவது சாத்தியமா? கடவுள் வழிபாடு எப்படி ஆதிகால இயற்கை வழிபாடு முதல் இன்றைய பிரம்மாண்டமான கோயில் வழிபாடுவரை வளர்ச்சியடைந்தது?
போன்றவற்றிற்கு தக்க ஆதாரங்களுடன் விடையாக வருகிறது திரு. பேரா. சுந்தர ஷண்முகனார் அவர்கள் எழுதிய 'கடவுள் வழிபாட்டு வரலாறு' நூல்.

'தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்' நுல் மெரீனா பதிப்பகத்திலும் 'கடவுள் வழிபாட்டு வரலாறு' நூல் "freetamilebooks.com" வலைதளத்திலும் கிடைக்கிறது.

இவ்விரு புத்தகங்களை படிப்போம், நம் வாழ்வு மற்றும் சிந்தனைகளின் வேர்களை அறிந்து நம் பகுத்தறிவை விரிவு செய்வோம்.

நட்புடன்,
இரா. அரவிந்த்.



(இந்தப் படத்தை எடுத்தவர் kayjee அல்ல. ஒரு 'த' படம் 18 ஆம் பக்கம் போட்டதால் balancing செய்ய 'அ' படம் - 36 ஆம் பக்கம் போட்டோம். )

# ஒருவரின் குரலுக்கு மயங்க வைத்தான் உண்மையை அதிலே உறங்க வைத்தான்...

**K சங்கர் இயக்கத்தில் 1965 ஆம் வருடம் வெளியான திரைப்படம் பஞ்சவர்ணக்கிளி. இரட்டையர்களான விஸ்வநாதன் ராமமூர்த்தி இசையில் மிக இனிமையான பாடல்களைக் கொண்ட படம்.**




**ஜெய்சங்கர் இரட்டை வேடங்களிலும், மற்றும் முத்துராமன், கே ஆர் விஜயா, நாகேஷ் ஆகியோர் நடித்திருக்கும் படம்.**




No Man Of Her Own என்று 1950 இல் வெளிவந்த ஆங்கிலத் திரைப்படத்தின் இன்ஸ்பிரேஷனில் உருவான படமாம் இது!




இந்தப் படத்திலிருந்து கண்ணன் வருவான் பாடல்தான் எனது தெரிவு, ஸ்டார் பாடல். ஆனாலும் மற்ற பாடல்களைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அழகன் முருகனிடம் ஆசை வைத்தேன் எனும் அழகான சுசீலாம்மாவின் பாடலும் உண்டு. தமிழுக்கும் அமுதென்று பேர் என்னும் பாரதிதாசன் பாடல் தவிர மற்ற பாடல்களை வாலி எழுதி இருக்கிறார்.



## முதலில் பி சுசீலா குரலில் பாரதிதாசன் பாடல்.

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத் தமிழ்
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத் தமிழ்
எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!

# மின்நிலா 005

Link: https://youtu.be/Cg-5E08rgJc

========

அடுத்து இதையே சற்றே மாற்றி அவளுக்கும் தமிழென்று பேர் என்று வாலி எழுதி இருக்கும் பாடல்.



டி எம் எஸ் குரலில் அருமையாக அமைந்திருக்கும் பாடல்.

அவளுக்கும் தமிழ் என்று பேர்
என்றும் அவளெந்தன் உள்ளத்தில்
அசைகின்ற தேர் அசைகின்ற தேர்
அவளுக்கும் தமிழ் என்று பேர்
என்றும் அவளெந்தன் உள்ளத்தில்
அசைகின்ற தேர் அசைகின்ற தேர்

அவளுக்கு நிலவென்று பேர்
வண்ண மலர் கொஞ்சும் குழல் அந்த முகிலுக்கு நேர்
அவளுக்கு குயிலென்று பேர்
அந்த குயில் கொண்ட குரல் கண்டு கொண்டாடும் ஊர்

## மின்நிலா 005

அவளுக்கு அன்பென்று பேர்
அவளுக்கு அன்பென்று பேர்
அந்த அன்பென்ற பொருள் நல்ல பெண்மைக்கு வேர்
பெண்மைக்கு வேர்

அவளுக்கும் தமிழ் என்று பேர் என்றும் அவளெந்தன்
உள்ளத்தில் அசைகின்ற தேர் அசைகின்ற தேர்

அவள் எந்தன் அறிவுக்கு நூல்
அவள் மொழிகின்ற வார்த்தைகள் கவிதைக்கு மேல்
கவிதைக்கு மேல்
அவளுக்கு அழகென்று பேர்
அந்த அழகெந்தன் உள்ளத்தை உழுகின்ற ஏர்
உழுகின்ற ஏர்

அவளுக்கும் தமிழென்று பேர் என்றும்
அவளெந்தன் உள்ளத்தில் அசைகின்ற தேர்
அசைகின்ற தேர்

அவளுக்கு உயிர் என்று பேர்
என்றும் அவள் எந்தன் வாழ்வெனும் வயலுக்கு நீர்
வயலுக்கு நீர்
அவள் எந்தன் நினைவுக்கு தேன்
இந்த மனம் எனும் கடலுக்கு கரை கண்ட வான்
அவள் எந்தன் நினைவுக்கு தேன்
இந்த மனம் எனும் கடலுக்கு கரை கண்ட வான்
அவளுக்கும் தமிழென்று பேர்
என்றும் அவளெந்தன் உள்ளத்தில்
அசைகின்ற தேர் அசைகின்ற தேர்

Link : https://youtu.be/E5WgJRcArLI




இனி நான் சொல்ல வந்த பாடலான கண்ணன் வருவான் பாடல். இதுவும் பி சுசீலா பாடிய பாடல் என்றாலும் இந்தப் பாடல் என்னை மிகவும் கவர்ந்த பாடல்களில் ஒன்று.

கண்ணன் வருவான் கதை சொல்லுவான்
வண்ண மலர்த் தொட்டில் கட்டித் தாலாட்டுவான்
குழலெடுப்பான் பாட்டிசைப்பான்
வலம்புரிச் சங்கெடுத்துப் பாலூட்டுவான்
வலம்புரிச் சங்கெடுத்துப் பாலூட்டுவான்

பச்சை வண்ணக் கிளி வந்து பழம் கொடுக்க
பட்டு வண்ணச் சிட்டு வந்து மலர் கொடுக்க
கன்னங்கரு காக்கை வந்து மை கொடுக்க
கண்ணன் மட்டும் கன்னத்திலே முத்தம் கொடுக்க
முத்தம் கொடுக்க முத்தம் கொடுக்க
தத்தித் தத்தி நடக்கையில் மயில் போலே

திக்கித் திக்கிப் பேசுகையில் குயில் போலே
கொஞ்சிக் கொஞ்சி எடுக்கையில் கொடி போலே
அஞ்சி அஞ்சி விழுவாய் மடி மேலே
ஆரிரோ ஆரிராரி ஆரிராரி ஆராரோ ஆராரோ
ஆரிராரி ராரிராரி ராரிரோ ஆரிராரி ராரிராரி
ஆராரோ ஆரிராரி ராரிராரி ஆராரோ

உனக்கென்றும் எனக்கென்றும் உறவு வைத்தான்
இருவரின் கணக்கிலும் வரவு வைத்தான்
ஒருவரின் குரலுக்கு மயங்க வைத்தான்
உண்மையை அதிலே உறங்க வைத்தான்
உறங்க வைத்தான் உறங்க வைத்தான்
தத்தித் தத்தி நடக்கையில் மயில் போலே
திக்கித் திக்கிப் பேசுகையில் குயில் போலே
கொஞ்சிக் கொஞ்சி எடுக்கையில் கொடி போலே
அஞ்சி அஞ்சி விழுவாய் மடி மேலே
ஆரிரோ ஆரிராரி ஆரிராரி ஆராரோ ஆராரோ
ஆரிராரி ராரிராரி ராரிரோ ஆரிராரி ராரிராரி
ஆராரோ ஆரிராரி ராரிராரி ஆராரோ

சுட்டி : https://youtu.be/P-p0zdfAUXg

# முகக்கவசம் தயாரித்து இலவசமாக வழங்கும் திவ்யா

1) எங்களுடன் வேலை பார்த்த ஒரு பையன் சொந்த ஊருக்குக் கிளம்பி, ரயிலில் சாப்பாடு இல்லாமல் கஷ்டப்பட்டதையும், பிஹாரில் 14 நாட்கள் பாழடைந்த கட்டிடத்தில் தங்கவைக்கப்பட்டதையும் சொன்னதால் பயம் அதிகமாகிவிட்டது.

கர்ப்பிணியான என் மனைவியை எப்படி அழைத்துக்கொண்டு ஊருக்குப் போவது என்று பயந்தபோது, 'தம்பி நீ வீட்டு வாடகை எல்லாம் தர வேண்டாம். நிலைமை சரியாகும் வரை இங்கேயே இரு' என்று தமிழ்க்குமரன் சொல்லிவிட்டார். அவரது மனைவியும், 'பிரசவம் வரையில் பார்த்துக்கொள்வது என்னுடைய பொறுப்பு' என்று சொல்லிவிட்டார்.




2) மலேஷியா நாட்டின் பினாங்கு நகரில் டாக்டர்களுக்கு, முகத்தை மூடும் பாதுகாப்பு கவசம் தயாரித்து, இலவசமாக வழங்கும், அந்த நகரில் வசிக்கும் தமிழ்ப்பெண் திவ்யா.



==============================

# மூன்றாவது மூர்த்தி - எம்.எல்.வி



ரமா ஸ்ரீனிவாசன்

எனக்கும் சங்கீத ராகங்களுக்கும் காத தூரம். நன்றாக பாடல்களை ரஸித்துக் கேட்பேனே தவிர, ராகங்களைக் கண்டு

பிடிக்கும் அளவு திறமை கிடையாது. ஆயினும் நான் பிறந்த குடும்பம் ஒரு பெரிய சங்கீதக் குடும்பம். எனது தந்தையார் பிரபல பாடகி டி.கே.பட்டம்மாள் அவர்களின் ஒன்று விட்ட தம்பி. ஒரு சில வருடங்கள் என் அப்பா அவருக்கு பின்பாட்டுக் கூட பாடினார் என்று பின்பு அவர் கூற அறிந்துகொண்டேன். இருந்தும் அந்த முதல் வாக்கியம் நிஜம்.

அக்காலத்தில் குடும்பங்கள் யாவும் மிகவும் நெருக்கமாகவும் பின்னிப் பிணைந்தும் இருந்தன. எல்லா விஷேஷங்களுக்கும் என் அத்தை (டி.கே. பட்டம்மாள்) இல்லத்திற்கு சென்று ஆசி வாங்கி வருவோம். அவ்வாறு ஒரு நடை சென்றிருந்த போது அங்கேதான் கர்னாடக இசை மேதை எம்.எல்.வசந்தகுமாரி அவர்களை சந்தித்தேன். மிகவும் அமைதியாகவும், உற்சாகமாகவும் பழகினார். இரு பாடகர்களும் சேர்ந்து பல பிரபல கர்னாடக கீர்த்தனைகளை பாடி மகிழ்ந்தனர்.

ஜுலை 3ஆம் தேதி எம்.எல்.வி. அவர்களின் பிறந்த நாள் (1928 - 1990) என்பதால் இவ்வாரம் அவரைப் பற்றி எழுத முற்பட்டேன்.

மெட்ராஸ் லலிதாங்கி வசந்தகுமாரி என்ற இயற்பெயர் கொண்ட எம்.எல்.வசந்தகுமாரி கூத்தனூர் அய்யா சுவாமி ஐயருக்கும் லலிதாங்கிக்கும் மகளாகப் பிறந்தார். பெற்றோர் இருவரும் இசைக் கலைஞர்கள் ஆவர்.


சென்னையில் ஆங்கிலப் பள்ளியில் படித்து மருத்துவத்துறையில் நுழைய இருந்தவரை பிரபல பாடகர் ஜி.என். பாலசுப்பிரமணியம் அவர்கள் இசைத்துறைக்கு இழுத்தார் என்பதுதான் உண்மை.

எம்.எல்.வி. அவர்கள் 1970ல் சங்கீத நாடக அகாதமி விருது, 1976ல் மைசூர் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம், 1977ல் சென்னை மியூசிக் அகாதெமியின் சங்கீத கலாநிதி விருது, 1978ல் இசைப்பேரறிஞர் விருது, பத்ம பூஷன் விருது மற்றும் 1987ல் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டியும் சங்கீத கலாசிகாமணி விருது என கணக்கற்ற விருதுகளைப் பெற்றவர். இதில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் சங்கீத கலாநிதி விருதை மிகக் குறைந்த வயதான 49 வயதில் பெற்ற பெண் கலைஞர் இவராவார்.

இவர் இந்தியன் கிளாஸிகல் சங்கீதத்திலும் பின்னணிப் பாடல்களிலும் கை தேர்ந்தவர். கர்னாடக சங்கீதத்தை ரசிகர்களுக்கு வழங்குவதில் ஒரு புதிய பாதை வகுத்தார். எம்.எஸ். சுப்பலஷ்மி, டி.கே.பட்டம்மாள், எம்.எல்.வசந்தகுமாரி மூவரும் சேர்ந்து அக்காலத்தின் சங்கீத மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தனர்.

இருப்பினும் எம்.எல்.வியின் புதுமையான அணுகுமுறை அவருக்கு ஒரு தனி இடத்தை அமைத்துக் கொடுத்தது.

அவர், பெரும் பாடகர் ஜி.என்.பாலசுப்பிரமணியனின் சிஷ்யையாக இருந்தாலும் தனக்கென்று ஓர் பாணியை அமைத்துக் கொண்டு தனித்தோங்கினார். அவரது முதல் கச்சேரி 13ஆம் வயதில் நடந்தது. 11ஆம் வயது முதல் தன் பாடகி அம்மாவுடன் கச்சேரிக்கு சென்று பழகியவர் ஒரு முறை பங்களூரில் தன் அண்ணையின் உடல்நலக் கோளாறால் மேடையில் பாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றார்.




அவர் தனித்துவம் வாய்ந்தவர். எந்த மேடையும் எந்த ரசிகர் குழாமும் அவரை அதைரியப் படுத்தியதில்லை. அவருடைய குல தெய்வம் கூத்தனுர் சரஸ்வதி எம்.எல்.வியுடனே பயணம் செய்தாற்போல் இருந்தது. எம்.எல்.வியும் விடாமல் தஞ்சை கூத்தனூரிலுள்ள சரஸ்வதி தேவியை தரிசித்தப் படியே இருந்தார்.

ஒரு முறை தன் மகனுக்காக ஓர் துணி ஏற்றுமதி வணிகத்தை துவங்குவது பற்றி மிகவும் குழம்பிப் போன எம்.எல்.வி. ராயப்பேட்டையில் இருந்த அவருடைய நண்பர் வீட்டிற்கு சென்றிருந்தார். அவர் அங்கு வந்து இறங்கியதுதான் தாமதம். சுற்று முற்றும் இருக்கும் அனைத்து ரசிகர்களும் அவரது நண்பர் வீட்டில் குழுமி எம்.எல்.வியை வரவேற்று அவரைப் பாடச் சொல்லி வற்புறுத்தினார்கள். அவரும் முகம் கோணாமல் யாவரையும் மகிழ்வித்த பிறகுதான் தன்

வேலையைத் தொடங்கினார். இது அவரது தன்மைக்கும் பண்புக்கும் ஓர் பெரிய எடுத்துக் காட்டாகும்.

அவர் என்றுமே தன் சிஷ்யர்களையும் தன் சக கலைஞர்களையும் கை தட்டி பாராட்டும் குணமுள்ளவர். என்றுமே மேலும் கற்க வேண்டும் என்ற வேட்கை உடையவராக இருந்தவர்.

1971ல் எம்.எல்.வி மியூஸிக் அகாடமியில் பாடும்போது எம்.எஸ்.சுப்பலஷ்மி, ராதா மற்றும் சதாசிவம் முன்வரிசையில் உட்கார்ந்திருந்தனர். ஆரம்ப கேதாரகௌல வர்ணத்திலிருந்து முடிவான "யாதவ ராயா" வரையில் பிரமிக்க வைக்கும் வகையில் பாடி அம்மூவரையுமே அசத்தி விட்டார் என்றால் மிகையாகாது.

<u>வயலின் வித்வான் லால்குடி ஜெயராமன் வார்த்தைகளில்</u> : "அவர் தன் மகளை அழைத்துக் கொண்டு என் இல்லத்திற்கு வருவார். தன் பெண் என்னிடம் வயலின் கற்று கொள்ள வேண்டும் என்பது அவரது ஆசை. அவருக்கு என்னுடைய தீர்மானங்களும் தில்லானாக்களும் மிகவும் பிடிக்கும். எம்.எல்.வியின் ராக ஆலாபனைகள் மிகவும் நேர்த்தியாகவும் விரிவாகவும் பாடப்பட்டவை. அவர் நவராத்திரி கொலுவை பாட்டுப் போட்டிகளுடன் கொண்டாடுவதே மிகவும் சிறப்பாக இருக்கும். அவருடைய பாட்டு நடை மிகவும் தைரியமாகவும் ஏகப்பட்ட கற்பனையுடனும் திகழ்ந்தது. அவர் பாடிய தண்டபாணி தேசிகரின் பவானி ராக "உன்னையன்றி" என்றும் என் மனதில் நிற்கின்றது".

மேடை பயமே இல்லாத அவரது மேடையில் ராகங்களுடன் விளையாடும் திறனோ அங்கிருந்தால்தான் புரியும். ஸ்ருதி

பேதமும் அவரும் ஒன்றிணைந்திருந்தார்கள். சங்கராபரணத்தில் நீந்திக் கொண்டிருக்கும்போதே சட்டென்று கல்யாணிக்கு ஒரு நொடிப் பொழுதில் தாவி விடுவார். தோடி மன்னர் திரு.டி.என்.ஆர் அவர்கள் முன்னிலையில் கம்பீரமாகத் தோடியை பாடி அத்தனை நெளிவு சுளிவுகளையும் பிரகாசமாக தன் நிகழ்ச்சியில் வெளிக் கொணர்ந்து டி.என்.ஆர் அவர்களிடமே ஷொட்டு வாங்கியவர் எம்.எல்.வி.

எம்.எல்.வி. ஓர் பிளாட்டிங்க் தாளைப் போல் திரு ஜி.என்.பி கற்று கொடுத்தவை யாவற்றையும் தன்னுள் வாங்கி கிரஹித்துக் கொண்டார்.

<u>திரு. ஜி.என்.பி. அவர்களின் வார்த்தைகளில்</u> : “வசந்தியை ஓர் உண்மையான சிஷ்யையாக வகைப்படுத்தலாம். நான் கற்றுக் கொடுக்கும் யாவற்றையும் உள் வாங்கிக் கொண்டு தன் தனி பாணியில் புகழ்பெற்ற படைப்புகளை ரசிகர்களுக்கு அளிப்பார்”. இதை விட எவரும் எம்.எல்.வியைப் பற்றி நுணுக்கமாகவும் தெளிவாகவும் கூற முடியாது.

எம்.எல்.வி திரைப்பட பாடல்களையும் ஓர் கை பார்த்தார். அவர் விக்ரமாதித்தன் படத்தில் பாடிய “அதிசயம் இவனது அறிவு மயம்” என்ற பாடலைத் திருப்பிப் போட்டு “அதிசயம் இவளது அறிவு மயம்” என்று பாடலாம். என்.எஸ்.கிருஷ்ணனின் “மணமகள்’ திரைப் படத்தில் அவர் பாடிய “எல்லாம் இன்ப மயம்” மற்றும் “சின்னஞ்சிறு கிளியே” காலத்தைத் தாண்டிய காவியங்கள் ஆயின.

திரை பாடல்கள் குறைய ஆரம்பித்த பின் கர்னாடக இசையில் கவனம் கூடியது. அவரது நடபைரவியும் நாக காந்தாரியும் ரசிகர்களை உச்சத்திற்கு கொண்டு சென்றன.

எம்.எல்.வியின் புரந்தரதாஸர் கிருதிகள் மெல்லிசையின் உயர்ந்த வெளிப்பாடாக அமைந்திருந்தன. அவர் தீக்ஷிதர் கிருத்களை பாடும்போது அவை மிக நேர்த்தியான இசைச் சொற்பொழிவாகவே தெரிந்தன.

மராட்டிய அபங்குகள் மேல் அவருக்கு இருந்த மீளாக் காதல் அவரை சிந்து பைரவியை படே குலாம் அலியிடமிருந்தும் ஓம் நமோ நாராயணாவை சாருமதியிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேகம் பிறப்பித்தன.




எம்.எல்.வியின் மார்கழி மாதத் திருப்பாவைப் பாடல்கள் அம்மாதத்திற்கே தனிப் பெருமையை

ஏற்படுத்தின. தன்னிச்சையான தனித்தன்மை அவரது தனி முத்திரையாகத் திகழ்ந்தது.

எம்.எல்.வி அவர்களின் 81ஆவது பிறந்தநாளான ஜூலை 3ஆம் தேதி 1990 அன்று காலை ஆல் இந்தியா ரேடியோ எம்.எல்.வி, சாருமதி மற்றும் கன்னியாகுமாரி மூவரின் ஓர் மிக சிறப்பான ரெகார்டிங்கை மிகத் தெளிவான கருத்துடனும் புத்திசாலித்தனமான தேர்வுடனும் ஒலி பரப்பியது. ஓர் பிரமாதமான கல்யாணி ஆலாபனையும் ஷ்யாமா சாஸ்திரியின் “பிரனவாரா”வும் மத்தியமாவதியில் “பாலிஞ்சு காமாக்ஷி”யும் சேர்ந்து உயர்மிகு எம்.எல்.வியின் உச்சத்தை ரஸிகர்களான நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

எம்.எல்.வி அவர்கள் ஒரு ‘லெக் டெம்’மில் பேசும்போது, கடுமையான குருகுலத்தில் கற்றுக் கொண்ட வித்வான்களான அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், மஹாராஜபுரம் விஸ்வநாதன், செம்பை வைத்தியநாத பாகவதர், ஆலத்தூர் சகோதரர்கள், செம்மங்குடி ஸ்ரீனிவாஸ ஐயர், ஜி.என்.பி. மற்றும் மதுரை மணி ஐயர் ஆகியோர் யாவரும் கடும்பாதையைக் கடந்து பெரும் பாடகர்களானவர்கள் என்று கூறினார். மேலும் அவர் ரஸிகர்களை இளம் வித்வான்களை கை தட்டி உற்சாகப் படுத்துமாறு வேண்டிக் கொண்டார். இல்லையெனில் இந்த மாபெரும் கலை வெகு விரைவில் மரித்துவிடும் என்றும் எச்சரித்தார்.

“யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்” என்ற பழமொழியை இவரும் தன் வாழ்க்கையிலும் தன்

வாழ்க்கைக்குப் பின்னும் தன் அசாதாரண இசைப்பயணத்தால் உண்மை என்று நிரூபித்திருக்கின்றார்.

பெரும் இசைக் கோயில் எம்.எல்.வி அவர்களுக்கு என்னுடைய இக்கட்டுரை ஒரு சிறு காணிக்கையாகும்.

========================



# சுய அறிமுகம் :



## ரேவதி நரசிம்ஹன்

வல்லிசிம்ஹன் என்ற புனை பெயரில் 15 வருடங்களாக நாச்சியார் வலைப்பதிவில் அவ்வப்போது பதிந்து வருகிறேன்.

எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள நல்ல இடம் என் வலைப்பதிவு.


நூற்றுக்கணக்கான நட்புகளை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது.

அதில் எங்கள் ப்ளாகின் பங்கு மிகப் பெரியது. மனம் நிறை நன்றி உங்கள் அனைவருக்கும்.

இதோ என் பதிவின் லிங்க்

https://naachiyaar.blogspot.com.

# எழுதுபொருள் :: கேஜி



3 ஆம் வகுப்பில் 3 நோட் புத்தகம். ஒரு இரட்டை வரி, ஒரு சாதாரண வரி மற்றது கணக்கு நோட். இது மட்டும் லேண்ட்ஸ்கேப்.முதல் இரண்டும் 40,80 பக்கங்களில். கணக்குக்கு 80, 120. பக்கங்களுடன்..

பென்சில் பலவிதம் ஆனாலும் நான் படித்த (இன்னும் கொஞ்சம் சரியாக சொல்லவேண்டுமானால், பள்ளிக்கு செல்லத் துவங்கிய) காலத்தில், முதலில் HB பென்சில்கள் மட்டுமே. அதுவும் venus kohinoor, mercury இப்படி மூன்று வகை மட்டுமே. பிறகு பெருமாள் செட்டி, அப்சரா, நடராஜ், ஸ்டாண்டார்ட். இதெல்லாம்.

உமர், ‘சிங்கப்பூரிலிருந்து வந்தது’ என்றொரு பென்சில் கொண்டு வருவான் மழுங்கிவிட்டால், மேலே சுற்றியிருக்கும் காகிதத்தை உரித்துவிட்டுத் தரையில் கூர் செய்து கொள்ளலாம்.

Silo பென்சில் அடுத்து வந்து நம்மை ரக்ஷித்தது. சின்னதாகப் போய்விட்ட பென்சில்களைப் பிளந்து இதற்குள் போட்டுக்கொண்டால் கடைசி 3 mm வரை...

பின்னர் வந்த screw பென்சில் மற்றும். புஷ் பென்சில் அவற்றுக்கு என்று ப்ரத்யேகமாகத் தயாரிக்கப்படும் core மட்டுமே உபயோகிக்கலாம். உபயோகமான core ஐ விட உடைந்ததே அதிகம்.

பாலிடெக்னிக்கில் படிக்கும் போது சென்னை கிண்டி தொழில் பூங்காவிலிருந்த பென்சில் பாக்டரிக்குப்

போனபின்தான் pencil lead இல் ஈயம் இல்லை என்பதும் அது graphite மற்றும் கோந்து கலவை என்பதும் body யில் உபயோகப்படும் மரத்தின் hardness உம் பென்சில் lead hardness உம் தொடர்புடையவை என்பதும் தெரிய வந்தது. ஏழு இன்ச் நீல பென்சில் இரண்டு துண்டாக்கப்பட்டு அக்காவுக்கு ஒன்று, எனக்கு ஒன்று என்று கொடுக்கப்படும்போது, அது அப்போதே புழுக்கையாகி விட்டதாகத் தோன்றும். ரமணி அண்ணாவிடம் கொடுத்து சீவச் சொன்னால் அவர் அதை மீண்டும் இரண்டாக்க கோடு போடுவது போல் ஒரு முனையிலிருந்து சுமார் 30/35 mm தூரத்தில் ஒரு கோடு வரைந்தவுடன் நமக்கு அழுகையாக வரும். ஆனால் கூம்பு வடிவம் உருப்பெருவதைக் காணக் காண, இந்த மாதிரி சீவ நாம் எவ்வளவு நாள் பயிற்சி பெற வேண்டுமோ என்று ஒரு ஆவல் வரும்!



**இந்த வார மின் நிலா பற்றிய உங்கள் கருத்துகளை,**

**engalblog@gmail.com**

**என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.**

**நன்றி.**

**வணக்கம்.**

**உங்களைப்பற்றி நீங்கள் ...**

**வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.**

**வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை**

**engalblog@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.**

**வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.**

**எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.**

**எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.**

# மின்நிலா 005

